5. அறிவிப்பு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)